மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.02/2021
அசல் வழக்கு எண்.102/2021

1. குஞ்சப்பன்
2. கெங்கிரெட்டி
3. ஜெயம் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

சின்னராஜீ ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 11.02.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.சுந்தரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) வழக்கு சொத்துகள் ஆதியில் நாச்சியப்பகவுண்டர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. அவரது குடும்பத்தில் 25.08.2000ல் ஏற்பட்ட பாகபிரிவினையில் பாகபத்திரத்தில் கண்ட சி அட்டவணை சொத்து நாச்சியப்பகவுண்டரின் மகன் N.மணிக்கு ஒதுக்கப்பட்டது. பாக தேதியிலிருந்து மணியும், அவரது குடும்பத்ினரும் அந்த சொத்துகளை அனுபவித்து வந்தனர். கடந்த 18.01.2006ல் மேற்படி மணி மற்றும் அவரது குடும்பத்தினர் பாகப்பிரிவினையில் கிடைத்த ஒரு பகுதி சொத்தான வழக்கு ஏ அட்டவணை சொத்தை மனுதாரர்களுக்கு விற்பனை செய்துவிட்டனர். கிரய தேதி முதல் மனுதாரர்கள் மேற்படி சொத்தான வழக்கு ஏ அட்டவணை சொத்தை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருகின்றனர்.

(ii) எதிர்மனுதாரர் வழக்குசொத்திற்கு அருகில் உள்ளவரும், மனுதாரர்களுக்கு விற்பனை செய்தவரான மணியின் சகோதரரும் ஆவார். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் பொது ஷராவாக தின்னப்பட்டி கிராமத்தில் 3 ம்நபருக்கு (பிரதிவாதி சின்ராஜுக்கு) பாத்தியப்பட்ட ச.எண்.164/2 பி நிலத்தில் நம்மில் 3, 4 (பிரதிவாதி சின்ராஜு, மணி)ஆகியோருக்கு பாத்தியப்பட்ட வீடு வரை, கொளத்தூர் உக்கம்பருத்திக்காடு செல்லும் தார்சாலையிலிருந்து கிழக்கிலிருந்து மேற்காக 12 அடி அகலத்தில் செல்லும் பாதை பொதுவானது என குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தில் மனுதாரர்களுக்கு விற்பனை செய்த மணிக்கு பாகபிரிவினை ஆவணத்தில் பொதுஷராவில் குறிப்பிடப்பட்டுள்ள தடவழி பாதை மற்றும் பாத்தியங்கள் சகிதமும் என குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளனர். பாகபத்திரத்தின் அடிப்படையில் மணி பொது வண்டிப்பாதையை அவரது வீட்டிற்கு செல்வதற்காக பயன்படுத்தி வந்தார். அதனை மனுதாரர்கள் சரிபார்த்து கிரயம் பெற்று பொது வண்டிப்பாதையை அனுபவித்து வந்தனர். மனுதாரர்களும், எதிர்மனுதாரரும் பொது வண்டிப்பாதை வழியாக குடிநீர் குழாயை அமைத்துள்ளனர்.

(iii) மனுதாரர்களின் முன்னேற்றத்தில் பொறாமை ஏற்பட்ட எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை விற்பனை செய்யுமாறு கேட்டார். ஆனால் மனுதாரர்கள் மறுத்துவிட்டனர். இந்நிலையில் எதிர்மனுதாரர் கோவிட்–19 சமயத்தில் பொது வண்டிப்பாதையை ஆக்கிரமித்து கல்தூாணை அமைத்துவிட்டார். மேலும் ஒரு ஷெட் அமைத்து வேலியும் போட்டுவிட்டார். எனவே பொது வண்டிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக மனுதாரர்கள் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர். ஆகவே ஆக்கிரமிப்பை நிரூபிக்க நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது</u>

(i) மனு பொய்யானது மற்றும் மோசடியானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதி குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்பட்ட பாகப் பிரிவினையின்படிக்கு பிரதிவாதிக்கு சொத்துகள் வந்தடைந்தது என்பதும்,

பிரதிவாதியின் சகோதரர் N.மணிக்கு பாகப்பிரிவினை மூலம் தாவா ஏ ஷெட்யூல் சொத்துகள் கிடைக்கப்பெற்றது என கூறுவதும் உண்மையாகும். அதேபோல் பிரதிவாதியின் சகோதரரான மணியிடமிருந்து வாதிகள் சொத்துகளை கிரயம் பெற்றனர் என்பதும் உண்மையாகும். பிரதிவாதிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் இடையே 25.08.2000 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் ச.எண்.164/2 பி–ல் ஒரு வண்டித்தடம் 12 அடி அகலத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் பொது வண்டிப்பாதையில் போர்வெல் தண்ணீர் பைப்லைன் பதித்துள்ளனர் என்பது பொய்.

(ii) பாகப்பிரிவினை ஆவணத்தில் பொது ஷராவில் தடவழி பாத்தியமானது பிரதிவாதியின் ச.எண்.164/2 பி கொண்ட பாக நிலத்தில் அமைந்துள்ளது. பிரதிவாதியின் சகோதரர் மணியின் வீட்டினை சென்றடைய மட்டுமே அந்த வண்டிப்பாதை உரிமையை பாகப்பிரிவினை ஆவணம் வழங்கியுள்ளது. அந்த உரிமையை தாண்டி வேறு தனிப்பட்ட உபயோகங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள குறிப்பான தடவழி வண்டிப்பாதை உரிமைகளையும் மணிக்கு குடும்ப பாக பிரிவினை ஆவணம் வழங்கவில்லை.

(iii) கோவிட்–19 நோய் தொற்று பயம் நிலவிய நிலையில் பிரதிவாதி பொது வழித்தடத்தின் தென்மேற்கு திசையில் வண்டிப்பாதையில் கல்தூண் நட்டு ஆக்கிரமித்தார் என்பதும், முள்வேலி கம்பி போட்டு ஷெட் அமைத்தார் என கூறுவதும் பொய்யாகும். சாட்சியங்களை சேகரிக்க வாதிகள் வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்ய பரிகாரம் கோர இயலாது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். சாட்சியங்களை சேகரிக்க விசாரணை நீதிமன்றம் கமிஷனர் நியமிக்க கூடாது என உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் பல தீர்ப்புகள் வழங்கியுள்ளது. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனு விசாரணையின் போது மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச்

சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i)(a) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கு சொத்துகள் ஆதியில் நாச்சியப்பகவுண்டர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது எனவும், அவரது குடும்பத்தில் 25.08.2000 ல் ஏற்பட்ட பாகபிரிவினையில் பாகபத்திரத்தில் கண்ட சி அட்டவணை சொத்து நாச்சியப்பகவுண்டரின் மகன் N.மணிக்கு ஒதுக்கப்பட்டது எனவும், பாக தேதியிலிருந்து மணியும், அவரது குடும்பத்தினரும் அந்த சொத்துகளை அனுபவித்து வந்தனர் எனவும், கடந்த 18.01.2006 ல் மேற்படி மணி மற்றும் அவரது குடும்பத்தினர் பாகப்பிரிவினையில் கிடைத்த ஒரு பகுதி சொத்தான வழக்கு ஏ அட்டவணை சொத்தை மனுதாரர்களுக்கு விற்பனை செய்துவிட்டனர் எனவும், கிரய தேதி முதல் மனுதாரர்கள் மேற்படி சொத்தான வழக்கு ஏ அட்டவணை சொத்தை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருகின்றனர் என வழக்காடியுள்ளது தெரிய வருகிறது.

(i)(b) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர் வழக்குசொத்திற்கு அருகில் உள்ளவரும், மனுதாரர்களுக்கு விற்பனை செய்தவரான மணியின் சகோதரர் எனவும், மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் பொது ஷராவாக தின்னப்பட்டி கிராமத்தில் 3 ம்நபருக்கு (பிரதிவாதி சின்ராஜுக்கு) பாத்தியப்பட்ட ச.எண்.164/2 பி நிலத்தில் நம்மில் 3, 4 (பிரதிவாதி சின்ராஜு, மணி)ஆகியோருக்கு பாத்தியப்பட்ட வீடு வரை, கொளத்தூர் உக்கம்பருத்திக்காடு செல்லும் தார்சாலையிலிருந்து கிழக்கிலிருந்து மேற்காக 12 அடி அகலத்தில் செல்லும் பாதை பொதுவானது என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மனுதாரர்கள் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தில் மனுதாரர்களுக்கு விற்பனை செய்த மணிக்கு பாகபிரிவினை ஆவணத்தில் பொதுஷராவில் குறிப்பிடப்பட்டுள்ள தடவழி பாதை மற்றும் பாத்தியங்கள் சகிதம் என குறிப்பிட்டு கிரயம் பெற்றுள்ளனர் எனவும், பாகபத்திரத்தின் அடிப்படையில் மணி பொது வண்டிப்பாதையை அவரது வீட்டிற்கு

செல்வதற்காக பயன்படுத்தி வந்தார் எனவும், அதனை மனுதாரர்கள் சரிபார்த்து கிரயம் பெற்று பொது வண்டிப்பாதையை அனுபவித்து வந்தனர் எனவும், மனுதாரர்களும், எதிர்மனுதாரரும் பொது வண்டிப்பாதை வழியாக குடிநீர் குழாயை அமைத்துள்ளனர் என வழக்காடியுள்ளது தெரியவருகிறது.

(i)(c) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்களின் முன்னேற்றத்தில் பொறாமை கொண்ட எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை விற்பனை செய்யுமாறு கேட்டார் எனவும், ஆனால் மனுதாரர்கள் மறுத்துவிட்டனர் எனவும், இந்நிலையில் எதிர்மனுதாரர் கோவிட்–19 சமயத்தில் பொது வண்டிப்பாதையை ஆக்கிரமித்து கல்தூணை அமைத்துவிட்டார் எனவும், மேலும் ஒரு ஷெட் அமைத்து வேலியும் போட்டுவிட்டார் எனவும், எனவே பொது வண்டிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக மனுதாரர்கள் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர் எனவும், ஆகவே ஆக்கிரமிப்பை நிரூபிக்க நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகள் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii)(a) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனு பொய்யானது மற்றும் மோசடியானது எனவும், சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், பிரதிவாதி குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்பட்ட பாகப் பிரிவினையின்படிக்கு பிரதிவாதிக்கு சொத்துகள் வந்தடைந்தது என்பதும், பிரதிவாதியின் சகோதரர் N.மணிக்கு பாகப் பிரிவினை மூலம் தாவா ஏ ஷெட்யூல் சொத்துகள் கிடைக்கப்பெற்றது என கூறுவதும் உண்மை எனவும், அதேபோல் பிரதிவாதியின் சகோதரரான மணியிடமிருந்து வாதிகள் சொத்துகளை கிரயம் பெற்றனர் என்பதும் உண்மை எனவும், பிரதிவாதிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் இடையே 25.08.2000ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் ச.எண்.164/2பி–ல் ஒரு வண்டித்தடம் 12 அடி அகலத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது உண்மை எனவும், ஆனால் பொது வண்டிப்பாதையில் போர்வெல் தண்ணீர் பைப்லைன் பதித்துள்ளனர் என்பது பொய் எனவும் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது

(ii)(b) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பாகப்பிரிவினை ஆவணத்தில் பொது ஷராவில் தடவழி பாத்தியமானது பிரதிவாதியின் ச.எண்.164/2பி கொண்ட பாக நிலத்தில் அமைந்துள்ளது எனவும், பிரதிவாதியின் சகோதரர் மணியின் வீட்டினை

சென்றடைய மட்டுமே அந்த வண்டிப்பாதை உரிமையை பாகப்பிரிவினை ஆவணம் வழங்கியுள்ளது எனவும், அந்த உரிமையை தாண்டி வேறு தனிப்பட்ட உபயோகங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள குறிப்பான தடவழி வண்டிப்பாதை உரிமைகளையும் மணிக்கு குடும்ப பாக பிரிவினை ஆவணம் வழங்கவில்லை எனவும், கோவிட்–19 நோய் தொற்று பயம் நிலவிய நிலையில் பிரதிவாதி பொது வழித்தடத்தின் தென்மேற்கு திசையில் வண்டிப்பாதையில் கல்தூண் நட்டு ஆக்கிரமித்தார் என்பதும், முள்வேலி கம்பி போட்டு ஷெட் அமைத்தார் என கூறுவதும் பொய் எனவும், சாட்சியங்களை சேகரிக்க வாதிகள் வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்ய பரிகாரம் கோர இயலாது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு எனவும், சாட்சியங்களை சேகரிக்க விசாரணை நீதிமன்றம் கமிஷனர் நியமிக்க கூடாது என உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் பல தீர்ப்புகள் வழங்கியுள்ளது எனவும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) மனுதாரர்கள் வழக்கறிஞர் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காக மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார். எதிர்மனுதாரர் வழக்குரைஞர் எதிருரையில் கூறியுள்ள காரணங்களுக்காகவும், கீழ்கண்ட முன்தீர்ப்பின்படிக்கும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல எனவும், எனவே தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் வாதிட்டார்.

<u>C.R.P.(PD)No.3583 of 2016</u>

<u>Kannammal vs. Naghendiran</u>

> "The defendants trespassed with an intention to grab the suit property and the said trespass was prevented by the petitioner. It is well settled that in a suit for injunction, it is for the plaintiff to prove his possession by getting in evidence. An Advocate Commissione cannot be appointed to collect the evidence to find out as to who is in possession of the suit property."

(iv) எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்திய மேற்கண்ட முன்தீர்ப்பினை பரிசீலனை செய்ததில் அந்த வழக்கு பிரதிவாதிகள் வழக்கு சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்வதை மனுதாரர் தடுத்துவிட்டதாகவும், ஆகவே யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக சாட்சியத்தை திரட்டுவதற்காக நீதிமன்ற

ஆணையாளரை நியமிக்க முடியாது என கூறியுள்ளது தெரியவருகிறது. ஆனால் இவ்வழக்கில் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை ஆக்கிரமித்துவிட்டதாக கட்சி செய்துள்ளதாலும், சுவாதீனத்தை பார்க்க வேண்டும் என்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரவில்லை என்பதாலும் மேற்கண்ட முன்தீர்ப்பு இம்மனுவிற்கு பொருந்தாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) வழக்குரையை கவனமாக பரிசீலனை செய்ததில் வழக்கானது வழக்கு ஏ அட்டவணை சொத்தை மனுதாரர்கள்/வாதிகள் அனுபவிப்பதை எதிர்மனுதாரர்/பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது எனவும், பி அட்டவணை சொத்து மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பொது சொத்து என விளம்புகை பரிகாரம் கோரியும், ஏ அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ள சி அட்டவணை சொத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(vi) இருதரப்பிலும் வழக்கு சொத்துகள் மனுதாரர்களுக்கு விற்பனை செய்த N.மணி மற்றும் எதிர்மனுதாரரின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதையும், அவர்கள் குடும்பத்தில் 25.08.2000 ல் பாகப்பிரிவினை செய்துகொண்டனர் என்பதையும், அதில் கண்ட சி அட்டவணை சொத்து என்.மணிக்கு ஒதுக்கப்பட்டது என்பதையும், மேற்படி என்.மணியிடமிருந்து மனுதாரர்கள் அதில் ஒரு பகுதியான வழக்கு ஏ அட்டவணை சொத்தை 18.01.2006 ல் கிரயம் பெற்றனர் என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

(vii) அதேபோல் மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் வழக்கு பி அட்டவணை சொத்தான ச.எண்.164/2 டி–ல் உள்ள பொது வண்டித்தடம் பொதுஷராவாக குறிப்பிட்டுள்ளது என்பதையும், அதில் என்.மணிக்கும், எதிர்மனுதாரருக்கும் உரிமை உள்ளது என்பதையும், என்.மணி விற்பனை செய்துவிட்டதால் மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரருக்கும் உரிமையுள்ளது என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

(viii) இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி பொது வண்டிப்பாதையான பி அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரர் கோவிட்–19 சமயத்தில் கல்தூண் அமைத்தார் எனவும், அதன்பின்னர் ஷெட் அமைத்து வேலி போட்டுஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக வழக்காடியுள்ளது தெரியவருகிறது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை எனவும், அது எதிர்மனுதாரரின் சொத்து எனவும், எ.ம.சா.ஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் மூலம் அனுபவித்து வருவதாகவும் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது. எனவே எதிர்மனுதாரர் பொதுப்பாதையான பி அட்டவணை சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா, இல்லையா என்பது குறித்து நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்யும் அறிக்கையானது மனுதாரர்கள்/வாதிகள் செயலுறுத்துக் கட்டளை பெற உரிமையுள்ளவர்களா என்பதை தீர்மானிக்க உதவும் என்பதால் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்திய அனைத்து கட்சிகளும் ஏற்புடையதல்ல என முடிவு செய்து இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக திரு.கே.மாதையன் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் வழக்கு சொத்துகளை பார்வையிட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையருடன் இருதரப்பு ஆவணங்களின் மூலம் அளந்தும், அதன் இயற்பியல் தோற்றம் குறித்தும், பி அட்டவணை சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா, இல்லையா என்பது குறித்தும் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.5000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர்கள் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு மேற்படி சொத்துகளை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க 16.03.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம்

ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S PRINCE SAMUVEL RAJ
Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2022.02.16 18:21:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 19.01.2017 | எதிர்மனுதாரர் பெயரிலுள்ள பட்டா எண்.870 | கணிணிநகல் |
| எ.ம.சா.ஆ.2 | | மாதிரி வரைபடம் | அசல் |
| எ.ம.சா.ஆ.3 | 19.08.2017 | வில்லங்க சான்றிதழ் | அசல் |
| எ.ம.சா.ஆ.4 | 29.06.1989 | சிட்டா | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.5 | 13.10.1986 | வட்டாட்சியரின் உத்தரவு | அசல் |
| எ.ம.சா.ஆ.6 | 13.02.1989 | எதிர்மனுதாரர் பெயரிலுள்ள பட்டாஎண்.870 | அசல் |
| எ.ம.சா.ஆ.7 | 21.08.2000 | புலவரைபடம் | உண்மைநகல் |
| எ.ம.சா.ஆ.8 | 05.01.1994 | கந்தாயரசீது | அசல் |
| எ.ம.சா.ஆ.9 | 25.01.1995 | கந்தாயரசீது | அசல் |

S PRINCE SAMUVEL RAJ
Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2022.02.16 18:21:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.